## தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜூன் 27 -

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று (27.06.2023) மற்றும் நாளை (28.06.2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

28.06.2023 முதல் 30.06.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பதிகளில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 35 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27/ 28 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பன்னாட்டு சிறு, குறு மற்றும் நடுத்தர

# தொழில் நிறுவனங்கள் நாள் விழா!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன் 27-

சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று நடைபெறுகிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றிடும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 27 ஆம் நாள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளினை அரசு விழாவாகக் கொண்டாடிட வேண்டும் என ஆணையிட்டதைத் தொடர்ந்து, இன்று 27.06.2023 காலை 10.30 மணி அளவில் நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில், முதலமைச்சர் அவர்கள், சமத்துவபுரம் தந்து சமூக நீதி காத்திட்ட சமூக நீதி காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில், பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதியை நிலைநாட்டிடும் விதமாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வண்ணம், இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்திருக்கும் திட்டமான “அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்” கீழ் முதல் 100 பயனாளிகளுக்கு ரூ.57.55 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.18.94 கோடி மானியத்திற்கான ஆணை வழங்கி திட்டத்தினை தொடங்கி வைக்கிறார்கள்.

**காடம்புலியூரில் மெய்நிகர் கண்காட்சியகம்!**

மேலும் இவ்விழாவில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவையை கருத்தில் கொண்டு செங்கல்பட்டு மாவட்டம், கொடூர், திருச்சி மாவட்டம், மணப்பாறை மற்றும் மதுரை மாவட்டம், சக்கிமங்கலம் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகள், குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல் குறுந்தொழில் குழுமமாக கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுகா காடம்புலியூரில் முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சந்தை வாய்ப்பினை உருவாக்கிடும் நோக்கோடு மெய் நிகர் கண்காட்சியகம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார்.



மேலும், பள்ளி புத்தாக்க மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் பதிப்பின் கீழ் வெற்றி பெற்ற 10 மாணவ அணிகளின் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளுக்கு முதலமைச்சர் அவர்கள் தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ. 10 இலட்சம் வழங்குகிறார்.

**30 ஆயிரம் பேருக்கு வேலைவாய்பபு!**

இது மட்டுமல்லாமல், சமச்சீர் வளர்ச்சியை முன்னெடுக்கும் விதமாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அனைத்து தொழில் பிரிவுகளையும் உள்ளடக்கிய ரூ.1510 கோடி மதிப்பில் 7,400 வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 100 புதிய முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், கடன் வசதியாக்கல் மற்றும் தொழில்நுட்ப கட்டமைப்பிற்கான ஃபேம் டிஎன் (FaMe TN) மற்றும் சிட்பி (SIDBI) இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகியவை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

விழாவில், தொழில்துறையின் வளர்ச்சிக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வண்ணம் மாநில அளவில் சிறந்த தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் சிறந்த வேளாண்சார் தொழில் நிறுவனத்திற்கான விருது, மாநில அளவில் சிறந்த மகளிர் தொழில் முனைவோர் விருது, மாநில அளவில் தரம் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்திற்கான விருது, சிறப்புப் பிரிவைச் சேர்ந்த சிறந்த நிறுவனத்திற்கான விருது ஆகிய விருதுகளும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு நிதிவசதியினை சிறப்பாக வழங்கிய மூன்று வங்கிகளுக்கான விருதுகளையும் முதலமைச்சர் அவர்கள் வழங்க உள்ளார்.

இந்த விழாவில் முதலமைச்சர் அவர்களால் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பில் ரூ.1723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டு, சுமார் 30,000 நபர்களுக்கு இதன்மூலம் வேலைவாய்ப்பும் உருவாக்கப் படும்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.06.2023) தலைமைச் செயலகத்தில் சட்டமன்றப் பேரவை மானிய கோரிக்கை மற்றும் பல்வேறு அரசு நிகழ்வுகளில் அறிவித்த சிறப்புத் திட்டங்கள், விளையாட்டுத்துறை மேம்பாட்டுத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுதல் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் உயர் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### 2023 ஆம் ஆண்டு தேசிய சீனியர்

## மகளிர் கால்பந்து இறுதி போட்டிக்கு தமிழ்நாடு அணி தகுதி!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜுன் 27-

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணிக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி பஞ்சாப் மாநிலம், அம்ரிஸ்தரில் ஜுன் 12ஆம் தேதி முதல் முதல் 28ஆம் தேதி வரை நடைபெற்று வருகிறது. இன்று (26.06.2023) நடைபெற்ற தமிழ்நாடு அணி மற்றும் இரயில்வே அணிக்கு எதிரான அரையிறுதியில் தமிழ்நாடு அணியானது 31 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள தமிழ்நாடு அணியினைப் பாராட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த அணியில் உள்ள 12 வீராங்கனைகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பயிற்சி பெற்ற முன்னாள் மாணவியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 5 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாடு சீனியர் பெண்கள் கால்பந்து அணி இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு தேசிய சீனியர் மகளிர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிப்போட்டி 28.06.2023 அன்று நடைபெறவுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திருவேற்காடு நகராட்சியில் 11.18 கோடி மதிப்பீட்டில்

## மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணி!

### ஆவடி சா.மு.நாசர் பணிகளைத் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், ஜுன் 27

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவேற்காடு நகராட்சியில் 13, 01, 12, 04, 08, 15 ஆகிய வார்டுகளில் தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்குவதை தவிர்க்கும் பொருட்டு மழைநீர் கால்வாய் அமைக்க 11.18 கோடி மதிப்பீட்டில் 5.989 கிமீ நீளத்திற்கு மழை நீர் வடிகால்வாய் பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கப்பட்டு அதன் துவக்க விழா நடைபெற்றது.

இதில் திருவேற்காடு நகரமன்ற தலைவரும் நகரக் கழக செயலாளருமான என்.இ.கே. மூர்த்தி, வரவேற்புரையாற்றினார்.

நகராட்சி ஆணையர் ஜஹாங்கிர் பாஷா, நகராட்சி பொறியாளர் அ.பு.குமார், சுகாதார அலுவலர் ஆல்பர்ட் அருள்ராஜ் பணி மேற்பார்வையாளர் ரங்கசாமி, நகர் மன்ற உறுப்பினர்கள் எஸ். சங்கர், காஞ்சனா இளையராஜா, சாந்தி ராஜா, ஜானகி சுடலைமணி, கே.பி.எஸ். சுதாகர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளருமான ஆவடி சாமு.நாசர் எம்.எல்.ஏ தலைமை வகித்து மழைநீர் வடிகால்வை பணியை மேற்கொள்ள பணிகளை துவக்கி வைத்து மழைக்காலம் என்பதால் விரைந்து பணிகளை முடிக்க அதிகாரியிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ.ரமேஷ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், நகரக் கழக நிர்வாகிகள் பெஞ்சமின், குமாரசாமி, நடராஜ், சாது, கோலடி ஜெ. சரவணன், செல்லதுரை, வட்டக் கழக செயலாளர் பி.வி. கே. கண்ணன், குமார், ரங்கதுரை, உமாபதி, தெய்வசிகாமணி, பரிசமுத்து, பா.பன்னீர் செல்வம், கோபால், சத்தியகிரி, மற்றும் குருநாதன், என். ராஜி, நாராயணன், நரேஷ், பேபிஸ்ரீ, உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டார்கள்.


